BHARATHIDASAN UNIVERSITY
Tiruchirappalli

Press Release

Prof. M. Lakshmanan, Professor of Eminence & DST-SERB Distinguished Fellow, Department of Nonlinear Dynamics, School of Physics of Bharathidasan University, Tiruchirappalli, has been selected for the award of **"Rashtriya Vigyan Puraskar – Vigyan Shri"** in **Physics** for the year 2024 by the Government of India.

Prof. Lakshmanan is an internationally well acknowledged eminent teacher, expert and researcher in the area of Nonlinear Dynamics. He has been with the Bharathidasan University since 1978 *(when it was PG Extension Centre of the University of Madras)* to this day. Prof. Lakshmanan had been the Professor & Head of the Department of Physics from 1992 to 2006, when he shaped the Department of Physics to attain a remarkable status as part of the Bharathidasan University.

Prof. M. Lakshmanan has brought many laurels to Bharathidasan University, and it is pertinent to note that he received the prestigious **S.S. Bhatnagar Prize in Physics in 1989,** U.G.C. **Hari Om Trust - Meghnad Saha Award in Theoretical Sciences** in 1990, **Tamil Nadu Scientists Award (TANSA)** in 1994, **R.D. Birla Award for Excellence in Physics** in 2014 by Indian Physics Association and Tamil Nadu Government's prestigious **Dr. A.P.J Abdul Kalam Award** in 2021.

Prof. Lakshmanan also received the **National Science Chair Award** from the Department of Science & Technology, Government of India, Science & Engineering Research Board (SERB) in 2021. Prof. Lakshmanan was one among the **five Eminent Professors** who received the award which has been instituted to honour outstanding Senior Scientists who have superannuated and are eminent for their outstanding contributions, both nationally and internationally, in the areas of Science, Technology, Engineering, Mathematics (STEM) and Medicine, to promote excellence in growth in Research & Development.

It is very great that even after his retirement in 2006, Prof. M. Lakshmanan has been with the Bharathidasan University, Tiruchirappalli, as Professor of Eminence, recognized under one or other prestigious Centrally Sponsored Distinct Fellowships. To cap all these, now he has been awarded the **"Vigyan Shri"** award by the Government of India and he will receive the award from the President of India in a function to be held at Rashtrapati Bhavan, New Delhi, on 23rd August 2024.

REGISTRAR

பாரதிதாசன் பல்கலைக்கழகம்

திருச்சிராப்பள்ளி - 620 024

செய்திக் குறிப்பு

பாரதிதாசன் பல்கலைக்கழக இயற்பியல் பள்ளியின் நேரியல் அல்லாத அமைப்பின் உயர் **பேராசிரியர் முனைவர். மு. லட்சுமணன்** அவர்கள் இயற்பியலில் 2024ஆம் ஆண்டிற்கான **"ராஷ்ட்ரிய விக்ஞான் புரஸ்கார் - விக்ஞான் ஸ்ரீ" ("Rashtriya Vigyan Puraskar – Vigyan Shri")** என்ற உயரிய விருதைப் பெற இந்திய அரசால் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

நேரியல் அல்லாத அமைப்பு தொடர்பான கற்பித்தல் மற்றும் ஆய்வுகளில் பல கண்டுபிடிப்புகளை அறிவியல் உலகத்திற்கு அறிமுகப்படுத்தி உலகளவில் அறியப்படும் பேராசிரியர் முனைவர் மு. லட்சுமணன் அவர்கள் 1978 முதல் (சென்னைப் பல்கலைக் கழகத்தின் முதுநிலை விரிவாக்க மையம்) இன்று வரை பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வருவது பெருமைக்குரிய ஒன்றாகும்.

பேராசிரியர் முனைவர் மு. லட்சுமணன் அவர்கள் 1989ல் இயற்பியல் துறையில் S.S. **Bhatnagar Prize in Physics** விருது, 1990ல் **U.G.C. Hari Om Trust - Meghnad Saha Award in Theoretical Sciences** விருது, 1994இல் தமிழ் நாடு அரசின் **Tamil Nadu Scientists Award (TANSA)**, 2014இல் இந்திய இயற்பியல் சங்கத்தின் **R.D. Birla Award for Excellence in Physics** மற்றும் 2021ல் தமிழ் நாடு அரசின் **Dr. A.P.J Abdul Kalam Award** விருது ஆகிய பல உயரிய விருதுகளைப் பெற்று பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் பெயரை உலகறிய செய்துள்ளார்.

2021ல் இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை வழங்கும் **National Science Chair Award** விருதைப் பெற்ற ஐவரில் பேராசிரியர் முனைவர் மு. லட்சுமணன் அவர்களும் ஒருவர். இவ்விருது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையில் சிறந்த பங்களிப்பாற்றி பணி ஓய்வு பெற்ற மூத்த பேராசிரியர்களுக்கு வழங்கப்படும் விருதாகும்.

2006ல் பணி ஓய்வு பெற்ற பிறகும் பேராசிரியர் முனைவர் மு. லட்சுமணன் அவர்கள் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து ஆய்வுகளை மேற்கொள்ள இந்திய அரசு ஆய்வு நிதியை வழங்கி வருகிறது. அவர் பெற்ற விருதுகள் அனைத்திற்கும் மகுடம் வைத்தது போன்று இந்திய அரசு இயற்பியலில் 2024ஆம் ஆண்டிற்கான **"ராஷ்ட்ரிய விக்ஞான் புரஸ்கார் - விக்ஞான் ஸ்ரீ"** என்ற உயரிய விருதை அறிவித்துள்ளது. ஆகஸ்ட் 23ஆம் தேதி புது தில்லி ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ள விழாவில் பேராசிரியர் முனைவர் மு. லட்சுமணன் அவர்களுக்கு இவ்விருதை இந்திய ஜனாதிபதி அவர்கள் வழங்குவார்.

பதிவாளர்